தமிழ்ப் பல்கலைக்கழகச்


# செய்தி மலர்

திருவள்ளுவராண்டு 2035 மார்ச் 2004


## இலக்கியத்துறை — புத்தொளிப் பயிற்சி

### தொடக்க விழா

தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக்கழக இலக்கியத்துறையின் சார்பில் ‘சமூக ஆன்மீக இயக்கங்களும் இந்திய இலக்கியமும்; சிறப்பு நோக்கில் தமிழ்’ என்ற தலைப்பில் நடைபெற்ற புத்தொளிப் பயிற்சியின் தொடக்க விழா 09.03.04 அன்று நடைபெற்றது.




இலக்கியத்துறைத் தலைவர் முனைவர் சீனிச்சாமி வரவேற்றார். தமிழ்ப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் முனைவர் இ.சுந்தரமூர்த்தி பேசும்போது, ‘‘தொல்காப்பியம் முதல் இன்றைய இலக்கியங்கள் வரையிலும் லிமர்க்யூ, சென்ட்ரியூ கவிதைப் பதிவுகளிலும் சமூகம் சார்ந்த ஆன்மிக அறிவியல் செய்திகளைப் பார்க்க முடிகிறது. தற்போது ஆன்மீக இயக்கங்கள் மனிதத்தை விளக்கும் வகையில் செயல்படுகின்றன. சென்ற நூற்றாண்டின் புதிய விழிப்பின் முன்னோடிகள் என்று வள்ளலாரையும், ஜி.சுப்பிரமணிய அய்யரையும் பாரதியார் கூறுவார். இவர்கள் காலத்தில் ஆன்மீகத்துடன் சமூக வளர்ச்சிச் சிந்தனைகளும் வளர்ந்தன. ஆன்மீக காலம், அறநிலைக் காலம், சமய காலம் என்று காலங்கள் பிரிக்கப்படுகின்றன. இதில் சமய காலத்தில் சமூக வளர்ச்சி, சமூகப் பணியாக மாறியது. உறவுகள் மூலமும், உறவுப் பெயர்களைக் கூறி இறைவனை வழிபடும் சமூக ஆன்மீக உறவு வளர்ச்சியும் ஏற்பட்டன.

ஆன்மீக இயக்கத்தில் சைவம், வைணவம், பௌத்தம், சாங்கியம் எனப் பல நிலைகள் இருந்தாலும், காலம்தோறும் சமய வழிபாடுகள் மாறி வருகின்றன. வழிபாடு, சமயம், தத்துவம், கோட்பாடு என்று அறிவியல் சார்ந்த சமயமாக உருவாகிறது. மனிதப் பண்பை மேம்படுத்த ஆன்மீக இயக்கங்கள் உதவுகின்றன. சிறந்த வாழ்வு நெறி அமைய ஆன்மீக இயக்கங்கள் வலியுறுத்தி வருகின்றன. காலப்போக்கில், ஆன்மீகச் சிந்தனை வளர, வளர மானுடம்தான் தெய்வ சிந்தனை என்று மாறுகிறது.

இராமகிருஷ்ணர், வள்ளலார், நாராயணகுரு போன்றோரும், அவர்களது சீடர்களும் ஆன்மீகத்துடன் சமூக வளர்ச்சிப் பணிகளையும் மேற்கொண்டனர். இராமலிங்கர் கல்விப் பயிற்சியிலும் ஈடுபட்டார். மக்களுக்கு ஆன்மீக விழிப்புணர்வு ஏற்படுத்துவதற்காகச் சன்மார்க்க விவேக விருத்தி என்ற இதழையும் தொடங்கினார். இலக்கிய வகுப்புக்கள் நடத்தினார். முதன்முதலில் திருக்குறள் வகுப்பைத் தொடங்கியவரும் இராமலிங்கர்தான். இதனால் அக்காலத்திலேயே ஒரு மறுமலர்ச்சி இயக்கம் உருவானது. சங்க காலம் தொட்டு இக்காலம் வரை வேத, உபநிடத கருத்துக்களை அலசவும், இறைவனை ஏற்கும், மறுக்கும் நிலைகள் குறித்த தகவல்கள் குறித்து ஆராயவும் இந்தப் புத்தொளிப் பயிற்சி வாய்ப்பாக அமையும்’’ என்றார்.

பல்வேறு பல்கலைக்கழக, கல்லூரிப் பேராசிரியர்கள் கலந்து கொண்டனர். இணைப் பேராசிரியர் ஈசுவரபிள்ளை நன்றி கூறினார்.

## மொழியியல் துறை

# திராவிடவியல் கருத்தரங்கு

தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக் கழகத்தில் பேராசிரியர் தெ.பொ. மீனாட்சி சுந்தரனார் அறக்கட்டளையின் சார்பில் மொழியியல் துறையுடன் இணைந்து திராவிடவியல் கருத்தரங்கு நடந்தது. பேராசிரியர் ஆரங்கன் வரவேற்றார். தமிழ்ப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் முனைவர் இ.சுந்தரமூர்த்தி பேசுகையில், "மொழி அடிப்படையில் தமிழர்கள் என்றும், இன அடிப்படையில் திராவிடர்கள் என்றும் பிரிக்கப்படுகின்றனர். திராவிடர் தோன்றியது குமரிக்கண்டம், மத்திய கண்டம், மெசபடோமியா என்று பல கருத்துக்கள் உள்ளன. ஆனாலும் இத்தாலி, ஸ்பெயின், கிரேக்கம் என உலகில் பல நாடுகளிலும் பரந்து இருந்தது என்பர். 1856ல் கால்டுவெல் தனது நூலில் திராவிட மொழிகளின் இலக்கண ஒப்பீட்டை ஆராய்ந்து நூலாகப் பதிப்பித்தார். அன்று முதல் திராவிட மொழியியல் குறித்துப் பல பதிவுகள் வந்த வண்ணம் உள்ளன.




சென்னையில் திராவிடப் பண்பாடு, கலைக் கோட்பாடுகள் குறித்துக் கூறும் இதழ்களின் வரலாறு குறித்த கருத்தரங்கு நடந்தது. திராவிடவியல் குறித்து நூற்றிற்கும் மேற்பட்ட 168 இதழ்கள் வெளிவந்துள்ளன. இக்காலத்தில் எவ்வாறு திராவிடவியல் ஆய்வு விரிவடைய வேண்டும் என்பது குறித்துப் பல தகவல்கள் இக்கருத்தரங்கில் தெரிவிக்கப்படும் என்றார்.

தமிழ்ப் பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் அகத்திய லிங்கம் பேசுகையில், கால்டுவெல்லின் திராவிடம் குறித்த நூலுக்குப் பின்னர், திராவிட மொழிகள், நாகரீகம், எண்ணங்கள் எனப் பல பரிணாமங்கள் உருவானது. இதனை ஆரிய மொழிகள், எண்ணங்கள், நாகரீகங்களுடன் ஒப்பிட்டு ஆய்வுகளை மேற்கொண்டனர். தொல்காப்பியத்தில் திராவிடம், ஆரியம் வேறுவேறு என்பது குறித்த பல தகவல்கள் உள்ளன. திராவிட மொழிகள், உலகில் உள்ள பல மொழிகளுடன் ஒப்புமை கொண்டுள்ளது. மொழித்தாக்கம் இருந்துள்ளது. திராவிட மொழியின் பரிணாமம், வீச்சு மிகுந்த செல்வாக்கை ஏற்படுத்தி உள்ளது. திராவிட மொழிகள் குறித்த ஆய்வில் தெ.பொ.மீ., எமனோ போன்றோர் மிகப் பெரிய பணிகளைச் செய்துள்ளனர். இருப்பினும் திராவிட மொழிகள் பேசும் மக்கள் எங்கிருந்து வந்தனர் என்ற ஆராய்ச்சி தேவை. மொகஞ்சதாரோ, கராப்பா கல்வெட்டுக்களின் எழுத்துக்கள் எந்த வகையைச் சேர்ந்தது என்று ஆய்வு மேற்கொண்டால், திராவிட மொழியின் வரலாற்று அடிப்படைகள் தெரியவரும். ஒலி அடிப்படையில் பல ஆராய்ச்சிகள், ஆராய்ச்சி முடிவுகள் உள்ளன. ஆனால் திராவிடத் தொடரியல் எப்படி இருந்தது. தமிழ்த் தொடரியல் மற்றும் திராவிட மொழித் தொடரியல்களின் ஒற்றுமை மற்றும் வேற்றுமைகள் என்னென்ன என்று ஆராயவேண்டும். இதனை முழுமையாக நெறிப்படுத்த வேண்டும்.

கணினி நிலையில் நமது மொழியை எப்படிப் புகுத்துவது என்று ஆராய வேண்டும். இளைஞர்கள் ஆராய்ச்சிக் களத்தில் இறங்கினால், திராவிட மொழிகள் சிறந்த இடத்தை அடையும் என்றார்.

அறக்கட்டளைத் தலைவர் பேராசிரியர் செ.வை.சண்முகம், மொழியியல் பேராசிரியர் எஸ்.பூபதி, ம.சுசீலா ஆகியோர் கலந்துகொண்டனர்.




## அறக்கட்டளைச் சொற்பொழிவு

அன்னை அஞ்சுகம் தந்தை முத்துவேலர் அறக்கட்டளைச் சொற்பொழிவுகள் 2004, மார்ச் 23,24 ஆகிய இரு நாட்களில் நடைபெற்றன. மொழிப்புலத் தலைவர் பேராசிரியர் து.சீனிச்சாமி தலைமையில் பாண்டிச்சேரி மொழியியல், பண்பாட்டு நிறுவனத்தின் முன்னாள் இயக்குநர், பேராசிரியர் இரா.கோதண்டராமன் "மொழியியல் நோக்கில் கால்டுவெல்லின் ஒப்பிலக்கணம்" என்ற பொருண்மையில் சொற்பொழிவு ஆற்றினார். பேராசிரியர் இரா.கோதண்டராமன் "திராவிட மொழிகளில் தமிழ்மொழியின் சிறப்புநிலை" என்ற பொருண்மையில் உரையாற்றினார். இரு நாட்கள் தமிழ்ப் பல்கலைக்கழக மொழிப்புலக் கருத்தரங்க அறையில் நடைபெற்ற சொற்பொழிவிற்குத் தஞ்சை நகரப் பெருமக்கள் வந்திருந்து கலந்துரையாடலில் பங்கு பெற்றனர். விழாவிற்கு வந்திருந்தவர்களை மொழியியல்துறை இணைப்பேராசிரியர் முனைவர் ச.இராசேந்திரன் வரவேற்றார். மொழியியல் துறை இணைப்பேராசிரியர் முனைவர் ம. சுசீலா நன்றி கூற விழா இனிதே முடிவடைந்தது.

- மொழியியல்துறை



# உலக மகளிர் தின விழா

உலக மகளிர் நாளையொட்டிச் சமூகவியல் துறையும் தமிழ்ப் பல்கலைக்கழக மகளிரும் இணைந்து 16.03.2004 அன்று நடத்திய கருத்தரங்கில் 40க்கும் மேற்பட்ட பேராளர்கள் கலந்துகொண்டனர். தமிழ்நாடு மகளிர் ஆணையத் தலைவர் முனைவர் வசந்திதேவி மகளிர் நாள் தோன்றியதன் சூழலையும் மகளிர் எதிர்கொள்ளும் சிக்கல்களையும் அவற்றிற்கான தீர்வுகளையும் குறித்து விரிவாக உரையாற்றினார்கள். பேராளர்களுடன் கலந்துரையாடினார். தஞ்சாவூர் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு கோசலராமன், தஞ்சாவூர் மாவட்டச் சமூக நல அலுவலர் திருமதி கஸ்தூரியும் நிகழ்ச்சியில் கலந்துகொண்டனர். 19.03.04 மாலை தமிழ்ப் பல்கலைக்கழக மகளிரின் கலைநிகழ்ச்சி சிறப்பாக நடைபெற்றது.




-முனைவர் அரோமா கு சாம், சமூக அறிவியல்துறை

## நடைபெற்ற நிகழ்வுகள் — மார்ச் 2004 இல்

09.03.2004 - இசைத்துறை - அறக்கட்டளைப் போட்டி
திருக்குறள் கீர்த்தனைப் போட்டி - பரிசளிப்பு விழா

09.03.2004 - இலக்கியத்துறை - புத்தொளிப் பயிற்சி - தொடக்க விழா

10.03.2004 - தங்கமணி அறக்கட்டளைச் சொற்பொழிவு

15.03.2004 - நிதிக்குழுக் கூட்டம்

16.03.2004 - மகளிர் தின விழா

17.03.2004 - இசைத்துறை அறக்கட்டளை - கருத்தரங்கம் - இசையும் அறிவியலும்

17.03.2004 - நாட்டுநலப்பணித்திட்டம் - தொடக்கவிழா - குருதிக்கொடை முகாம்

23.03.2004 - மொழியியல்துறை - அறக்கட்டளைச் சொற்பொழிவு

25.03.2004 - மொழியியல்துறை - தெ.பொ.மீ.நினைவுக்கருத்தரங்கு - திராவிடவியல்

26.03.2004 - திராவிடவியல் கருத்தரங்கு

26.03.2004 - அகராதியியல்துறை - தொடக்கப்பள்ளி ஆசிரியர்களுக்கான பயிலரங்கு, திருவாரூர்

29.03.2004 - இலக்கியத்துறை - புத்தொளிப் பயிற்சி - நிறைவு விழா

31.03.2004 - அகராதியியல்துறை - சுந்தரசண்முகனார் அறக்கட்டளை

இ.அ.ப. மட்டும்

நூலஞ்சல்

தமிழ்ப் பல்கலைக் கழகம்
தஞ்சாவூர்

# நாட்டுநலப்பணித் திட்டம்




தமிழ்ப் பல்கலைக்கழக நாட்டு நலப்பணித் திட்டத் தொடக்கவிழா, இரத்ததான முகாம் மற்றும் பயிற்சி, 17.03.04 அன்று நடைபெற்றது. நாட்டுநலப்பணித் திட்ட ஒருங்கிணைப்பாளர் முனைவர் செ.சுப்பிரமணியன் வரவேற்புரை வழங்கினார்.

தமிழ்ப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் முனைவர் இ.சுந்தரமூர்த்தி தம் தலைமையுரையில், ''நாட்டுநலப்பணித்திட்டம் என்பது மாணவர்களை மானுடநேயம் மிக்க மனிதர்களாக மாற்றுவது. வினைநலம், மனநலம், துணைநலம் என அனைத்து நலன்களையும் உள்ளடக்கியது நாட்டுநலம். நலம் என்பது எல்லாவற்றிலும் நலம் பேணுகிற இயல்பு. அத்தகைய நாட்டுநலம் பேணுகிற பணியை, மாணவர்கள் எவ்வாறு செய்யவேண்டும் என நாட்டு நலப்பணித் திட்டம் கூறுகிறது'' என்று குறிப்பிட்டார்.

நாட்டுநலப்பணித்திட்ட மாநிலத் தொடர்பு அலுவலர் முனைவர் கரு.நாகராசன் தனது தொடக்கவுரையில், ''என்.எஸ்.எஸ்-இல் இந்தியாவிலேயே அதிக மாணவத் தொண்டர்கள் தமிழகத்தில்தான் உள்ளனர். 3000-க்கும் மேற்பட்ட தமிழகக் கிராமங்கள் NSS மாணவர்களால் தத்தெடுக்கப்பட்டு வளர்ச்சி பெற்றுள்ளன'' என்று கூறினார். தஞ்சை மருத்துவக்கல்லூரி முதல்வர் டாக்டர் கே.கலைச்செல்வி 'தலைமைப்பண்பு' பற்றிக் குறிப்பிட்டார். தஞ்சை மருத்துவக்கல்லூரி குருதி ஏற்றும் மருத்துவ இயல்துறைத் தலைவர் டாக்டர் எம்.ராஜ்குமார் 'இரத்ததானம் செய்தல் மற்றும் எய்ட்ஸ் விழிப்புணர்வு' என்ற தலைப்பில் பேசினார். இந்தியச் செஞ்சிலுவைச் சங்க, தஞ்சைத் துணைத்தலைவர் முனைவர் சிசிலியா பாண்டியன் செஞ்சிலுவைச் சங்கம் பற்றிய கருத்துக்கள், செய்திகள் பலவற்றை விளக்கினார். மாணவர்கள் 25 பேர் இரத்ததானம் அளித்தனர். இலக்கியத்துறை மாணவர் குணசேகரன் நன்றி கூறினார். நாட்டுநலப்பணித்திட்ட சிறப்பு முகாம் 20.03.04 முதல் 29.03.04 முடியப் பத்துநாட்கள் மாதாக்கோட்டை கிராமத்தில் நடைபெற்றது. வட்டார வளர்ச்சி அலுவலர் திரு எம்.சம்பந்தம். பாரதிதாசன் பல்கலைக்கழக நாட்டுநலப்பணித்திட்ட ஒருங்கிணைப்பாளர் டாக்டர் வீரசேகரன், ஒன்றியத்தலைவர் நாஞ்சி சி.வரதராஜன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

-செ.சுப்பிரமணியன்,திட்ட ஒருங்கிணைப்பாளர், நாட்டு நலப்பணித்திட்டம்

## மார்ச் '04 இல்.....

## முனைவர் பட்ட வாய்மொழித் தேர்வு

| | ஆய்வாளர் பெயர்/துறை | தலைப்பு | வாய்மொழித்தேர்வு நடைபெற்ற நாள் |
|---|---|---|---|
| 1. | சி.விஜயாம்பிகை<br>சித்தமருத்துவத்துறை | Pharmacognostical studies on Mucuna pruriens and its adulterants | 05-03-2004 |
| 2. | கு.சந்திரன்<br>நாட்டுப்புறவியல்துறை | மதுரை மாவட்ட நாட்டுப்புறத் தெய்வங்கள் - ஓர் ஆய்வு | 18-03-2004 |
| 3. | கு.ச.மகாலிங்கம்<br>இந்தியமொழிகள் பள்ளி | இலக்கிய, வரலாற்று நோக்கில் இடைமருது | 29-03-2004 |

-தமிழ்ப் பல்கலைக்கழகத் தேர்வுப்பிரிவு

''பண்பாய் இதனைப் பேணிக் காப்போர்
பொன்னடி இரண்டும் எம்தலை மேலன''
-முதுமுனைவர் வ.அய்.சுப்பிரமணியம்